**செ. கு. எண்:117** **நாள்: 20.08.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 20.8.2017

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், அம்மாப்பேட்டை பேரூராட்சியில் **19.8.2017** அன்று ஏற்பட்ட மின் விபத்தில், புலியக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் திரு. மணியரசன் மற்றும் திரு. பிச்சையன் என்பவரின் மகன் திரு. கருணாநிதி ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின் விபத்தில் உயிரிழந்த திரு.மணியரசன் மற்றும் கருணாநிதி ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் விபத்தில் திரு. சத்தியராஜ் என்பர் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தியை அறிந்து வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் திரு. சத்தியராஜ் என்பவருக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கு உத்தரவிட்டுள்ளேன். இவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்து குறித்து அறிந்தவுடன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.துரைக்கண்ணு அவர்களை நேரில் சென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறவும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள திரு. சத்தியராஜ் அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. மணியரசன் மற்றும் திரு. கருணாநிதி ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்த திரு. சத்தியராஜ் என்பவருக்கு 50,000/-ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**